# சுவாமி விபுலாநந்தரின் கல்விப் பணிகள்

சுவாமி விபுலாநந்தர் சிறந்த கல்விமான். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பண்டிதர் பட்டம் பெற்ற முதல் இலங்கையர், இலண்டன் கேம்பிரிஜ் பல்கலைக் கழக விஞ்ஞானப் பட்டதாரி, மற்றும் சுவாமிகள், ஆசிரியர், அதிபர், பேராசிரியர், பதிப்பாசிரியர், பத்திரிகை ஆசிரியர் எனப் பல பதவிகள் வகித்து இலங்கையிலும் இந்தியாவிலும் கல்விப்பணி புரிந்த பேரறிஞர் ஆவார்.

சுவாமிகள் தனது 17 ஆவது வயதில், தான் கல்விகற்ற மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் மாணவ ஆசிரியராக கல்விப் பணியாற்றத் தொடங்கியவர். தொடர்ந்து, பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராகவும், விஞ்ஞான டிப்ளோமா பெற்ற பின்பு வேதிநூல் ஆசிரியராகவும், கொழும்பு, கல்முனை தொழில்நுட்பக் கல்லூரி, யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகவும் பணியாற்றியவர். மேலும் மானிப்பாய் இந்துக் கல்லூரி, திருகோணமலை இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராகப் பணிபுரிந்தார்.

பண்டிதர் மயில்வாகனன் இராமகிருஷ்ண சங்கத்தில் இணைந்து துறவறம் பூண்டவர். விபுலாநந்தராக நாமம் பெற்று, மீண்டும் இலங்கை வந்து கல்விப்பணியை தொடர்ந்து மேற் கொண்டவர். மிஷன் பாடசாலைகளை நிருவகிக்கும் முகாமையாளராக பணியாற்றும் போது, “அன்னையாயினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்” எனும் பாரதியின் பாடலுக்கு அமைய இலங்கையின் வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளில் புதிய பாடசாலைகளை நிறுவி, ஏழை மாணவர்கள் கல்விகற்க வசதி ஏற்படுத்தினார். மட்டக்களப்பு, காரைதீவு சாரதா வித்தியாலயம், கல்லடி சிவானந்த வித்தியாலயம் என்பவற்றை உதாரணமாக கூறலாம்.

சுவாமிகள் சிவானந்த வித்தியாலயத்தை ஆங்கிலப் பாடசாலையாக உருவாக்கினார். இதன் மூலம் ஏழை மாணவர்களுக்கு எட்டாக் கனியாக இருந்த ஆங்கிலக் கல்வியைக் கற்பதற்கு வசதியை ஏற்படுத்தினார். இதனை தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவர்கள் பயன்படுத்தினர் எனில் மிகையாகாது. மேலும் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும், மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலும் சிறுவர் இல்லங்களை அமைத்து, பெற்றோரை இழந்த சிறுவர்கள் தங்கியிரு ந்து கல்வி கற்க வசதியை ஏற்படுத்தினார். தமிழ்நாடு, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், இலங்கைப் பல்கலைக்கழகம் ஆகிய இரண்டிலும் உலகின் முதல் தமிழ்ப் பேராசிரிய ராகப் பணிபுரிந்த பெருமைக்குரியவர். தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்பித்து பல தமிழ் அறிஞர்களை உருவாக்கினார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் ஒரு பேராசிரியர் பரம்பரையை யும், தமிழ் வித்துவான் பரம்பரையையும் உருவாக்கிய கல்வியாளர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட கலைச்சொல்லாக்க கழகத்தின் தலைவராகப் பதவி வகித்தவர். பல அறிஞர்களை ஒன்றிணைத்து பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட புதிய சொற் களை உள்ளடக்கிய கலைச்சொல் அகராதியை உருவாக்கினார். இவ்வாறாக தம் வாழ்நாள் முழுக்க கல்விப்பணி புரிந்த சுவாமிகளை இலங்கை அரசாங்கம் தனது தேசிய வீரர்கள் பட்டிய லில் சேர்த்துக் கௌரவித்துள்ளது. அன்னாரது நினைவு நாளான ஜுலை 19 ஆம் திகதியை அகில இலங்கைத் தமிழ்த் தினமாகப் பிரகடனப்படுத்தி வருடா வருடம் கொண்டாடி வருகின்றது.

இவ்வாறாக இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளிலும் கல்விப்பணி புரிந்த பேரறிஞர் சுவாமி விபுலாநந்தர் பாதச் சுவடுகளை நாமும் பின்பற்றி கல்விப்பணியாற்றுவோம் வாரீர். –

நன்றி, வணக்கம். !